செ.வெ.எண்:-46/2020 நாள்:18.04.2020

# திண்டுக்கல் மாவட்டத்தில் ரேபிட் கிட் மூலம் கொரோனா வைரஸ் நோய் அறிகுறி உள்ளவர்கள், மருத்துவம் மற்றும் சுகாதாரப்பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

மத்திய, மாநில அரசுகள் கொரோனா வைரஸ் நோய் தொற்றினை தடுக்க போர்க்கால அடிப்படையில் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பொதுமக்களின் நன்மை கருதி, நோய் தொற்றை தடுக்கும் பொருட்டும், சமூக விலகலை உறுதி செய்யவும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உத்தரவின்படி குற்றவியல் நடைமுறை சட்டம் 144-ன் கீழ் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு 14.04.2020-ம் தேதி வரை விதிக்கப்பட்டு தற்போது மீண்டும் 03.05.2020-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் ஊரடங்கு காலங்களில் அத்தியாவசிய தேவைக்காக வெளியிடங்களுக்கு வரும் பொழுது சமூக விலகலை கடைபிடிக்க அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும். கண்காணிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை அவர்களின் வசிப்பிடங்களிலேயே வழங்குவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா தொற்று சமூக பரவலாக மாறாத வகையில் பொதுமக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வை அலுவலர்கள் ஏற்படுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வசித்த பகுதிகளில் மருத்துவர்கள் குழு தினந்தோறும் 100-க்கும் மேற்பட்டவர்களுக்கு தொடர்ந்து பரிசோதனை கொண்டு வருகின்றனர். சுகாதாரத்துறை அலுவலர்களால் விழிப்புணர்வு பணிகளும், மருத்துவ சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மற்றும் பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களால் தொடர்ந்து சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பட்சத்தில் வெளியிடங்களுக்கு பொதுமக்கள் வருவது குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே 10 வருவாய் வட்டங்களை சார்ந்த வட்டாட்சியர்களுக்கு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வயில் புதிய ஒலி பெருக்கிகள் (Movable Audio System) வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு கொரோனா தொற்று குறித்த விழிப்புணர்வும், மத்திய மாநில் அரசுகளால் அறிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குறித்த அறிவிப்புகளை தொடந்து தெரிவிப்பதற்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் ரேபிட் கிட் மூலம் கொரோனா வைரஸ் நோய் அறிகுறி உள்ளவர்கள் மற்றும் மருத்துவம் மற்றும் சுகாதாரப்பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பரவாமல் இருக்க மத்திய மற்றும் மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி அனைத்து வகை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகள் இன்றி வீடுகளை விட்டு வெளியில் வராமலும், சமூக இடைவெளியை கடைபிடித்தும், தங்கள் கைகளை அவ்வப்போது சோப்பு நீரால் சுத்தம் செய்தும் நோய் தொற்று பராவாமல் இருக்க மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் வருவாய் அலுவலர்(பொ) திரு.ச.கந்தசாமி, பழனி சார் ஆட்சியர் திருமதி உமா,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராஜ்குமார், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் திருமதி உஷா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி கங்காதாரணி, வட்டாட்சியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---